# கொடுப்பதும், தாராளகுணமும்

## உறவுமுறையிலான சபையில் வாழ்தல் IV

Translated from the original article, "Living in the relational church, IV"

By *Wayne Jacobsen*

"பணத்தைப் பின்பற்றுங்கள்!" இது Washington Post என்ற நாளிதழுக்காக, தன்னை அடையாளம் காண்பிக்காமல், Watergateபற்றிய தகவல்களைத் தந்துகொண்டிருந்த அடையாளங்காணமுடியாத Deep Throat என்பவன் கூறிய ஆட்டிப்படைக்கும் வார்த்தைகள்; இந்த வார்த்தைகள் நிக்சன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது வெள்ளை மாளிகையில் நடந்த ஊழலின் முடிச்சை அவிழ்க்கத் திருப்புமுனையான சத்தமாக அமைந்தன.

இது, "பணமே எல்லாவற்றிற்கும் பதில்," என்று கூறுகிற பிரசங்கி 10:19இன் சுவாரஸ்ரயமான எதிரொலி என்று நான் நினைக்கிறேன். தொலைக்காட்சிப் பிரசங்கிமார்கள் அனைவரும் ஏன் பணத்தைப்பற்றிப் பேசுகிறார்கள் என்று மக்கள் என்னிடம் கேட்கும்போது, நான் அவர்களுக்குப் பிரசங்கியின் வார்த் தையைச் சுட்டிக்காட்டுகிறேன். அமைப்புரீதியான மதம் ஏன் இப்படி நடக்கிறது என்று மக்கள் என்னிடம் கேட்கும்போதும், நான் அவர்களுக்குப் பிரசங்கியின் வார்த்தையையே சுட்டிக்காட்டுகிறேன். "என் இருதயம் உண்மையாகவே எதை விரும்புகிறது என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று அவர் கள் என்னிடம் கேட்கும்போது, நான் அவர்களுக்குப் பிரசங்கியின் வார்த்தையையே சுட்டிக்காட்டு கிறேன்.

மனிதனுடைய அகராதியில் பணமே எல்லாவற்றிற்கும் பதில். நீ அதை எப்படிப் பார்க்கிறாய் என்பதும், ம் அதை எப்படிப் பயன்படுத்துகிறாய் என்பதும் பிதா உன் வாழ்க்கையில் செய்துகொண்டிருக்கும் வேலையை நீ எப்படிப் புரிந்துகொள்கிறாய் என்பதைக் காண்பிக்கும்.

உறவுமுறையிலான சபை வாழ்க்கையைப்பற்றி மக்கள் என்னிடம் அநேகக் கேள்விகள் கேட்கிறார்கள்; அதில், "தசமபாகம் கொடுப்பதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்ற கேள்வியும், "நாம் குழந்தைகளை என்ன செய்யப் போகிறோம்?" என்ற கேள்வியும்தான் உச்சியில் இருக்கின்றன. பணம் என்ற காரியத்தைப்பற்றி நான் மிகவும் ஜாக்கிரதையுடன் பேசுகிறேன் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்; ஏனென்றால், இன்றைய நாட்களில் தேவனுடைய பிள்ளைகளுக்கிடையே பணம் என்ற காரியம் தவறாகப் பயன்படுத்தப்படுவதுபோல, வேறொன்றும் அவ்வளவு தவறாகப் பயன்படுத்தப் படுவதில்லை.

பொதுவாக, இதைப்பற்றிப் பேசுபவர்கள் இன்னும் அதிகமான பணத்தைப் பெறவேண்டும் என்பதற் காகவே பேசுகிறார்கள். எனவே, தொடக்கத்திலேயே நான் ஓர் எச்சரிக்கை கொடுக்க விரும்புகிறேன்; எனக்கு எந்தப் பணப் பிரச்சினையும் இல்லை. தயவுசெய்து எங்களுக்கு நன்கொடையோ அல்லது சந்தாவோ அனுப்ப வேண்டாம். எங்களுக்கு நன்கொடை அனுப்ப இது மறைமுகமான ஒரு வேண்டு கோள் என்றும் நினைக்க வேண்டாம். அப்படியல்ல. இதை நம்புவது உங்களுக்குக் கடினமாக இருந் தால், தயவுசெய்து இதற்குமேல் நீங்கள் வாசிக்க வேண்டாம்.

இந்தக் காரியத்தைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார்கள். அது, ஒன்று குற்ற உணர்வை மக் கள்மேல் சுமத்துகிறது அல்லது மக்கள் தேவனுக்குக் கொடுத்தால் தேவன் அதற்குக் கைமாறாக அதி கப் பணம் தருவார் என்று அவர்களுக்குப் பொய்யான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறது. என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஓர் ஆபத்து இருக்கிறது. ஆனால், உங்கள் வாழ்க்கையின் மற்ற எந் தப் பகுதியிலும் பிதாவின் கரத்தைப் பார்க்கும்போது நீங்கள் காண்கிற மகிழ்ச்சியையும் சுதந்தரத் தையும், கொடுப்பதிலும் நீங்கள் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தத் தலைப்புக்கான எல்லாப் பதில்களும் என்னிடம் இருப்பதுபோல் அல்லது இந்தத் தலைப்பைப்பற்றிய ஒரு முழுமையான கட்டுரையை என்னால் எழுத முடியும் என்பதுபோல் நான் நடிக்க விரும்பவில்லை. ஆனால், இந்தக் காரியத்தில் என் கிறிஸ்தவப் பயணம் என்னை எங்கு நடத்தியிருக்கிறது என்பதை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## இயேசுவும், பணமும்

தம் பிதாவுடனான உறவைப்பற்றிப் பேசியதைத்தவிர, மற்ற விஷயங்களைப்பற்றி இயேசு எந்த அளவுக் குப் பேசினாரோ, அதே அளவுக்கு அவர் பணத்தைப்பற்றியும் பேசினார். எதை நாம் பொக்கிஷமாகச் சேர்த்து வைக்கிறோமோ அல்லது தேவன் கட்டளையிடும்போது எதை நாம் தாராளமாகப் பகிர்ந்து கொள்கிறோமோ, அதுதான் நம் ஆசைகளை அதிகமாக வெளிப்படுத்தும் என்று அவர் கூறினார்.

சபை, ஆராதனை அல்லது ஜெபம் என்பதைப்பற்றிப் பேசியதைவிட, பணத்தைப்பற்றி அவர் அதிக மாகப் பேசினார் என்பதை சுவிசேஷங்களை மேலோட்டமாக வாசித்தால்கூடப் புரிந்துகொள்ள முடியும். தேவனுடைய நேர்மையையும், தாராளகுணத்தையும் பணத்தால் அளக்கக்கூடாது என்று அவர் நம்மை எச்சரித்தார். பரிபூரண ஜீவனுக்கும் நம்மிடம் எவ்வளவு பணம் இருக்கிறது அல்லது எவ்வளவு ஆஸ்தி கள் இருக்கின்றன என்பதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை; மாறாக, அது அவருடைய நீதியின் சுதந் தரத்திலும், அவருடைய சமாதானத்தின் இளைப்பாறுதலிலும், அவருடைய மகிழ்ச்சியின் நிறைவிலும் எளிதே வாழ்வதோடு சம்பந்தப்பட்டது என்றும் தெளிவாகக் கூறினார்.

இயேசுவைப் பின்பற்றுபவர்களில் இருக்கும் இராஜ்ஜியத்தின் ஜீவனைத் திணறடிக்கச் செய்யும் திராணி, பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நாட்டத்திற்கும், அது உண்டாக்குகிற கவலைகளுக்கும் இருக்கின்றன. அது உன் இருதயத்தைச் சொந்தமாக்கிக்கொள்வதற்குப்பதிலாக, அதை ஏழைகளுக் குக் கொடுத்துவிடுவது சிறந்தது.

ஞானமுள்ளவர்கள் பணத்தை இந்த உலகத்தில் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துவார்கள் என்றும் அவர் கூறினார். அது உன்னைச் சொந்தமாக்கிக் கொள்ளாதபோது, அதனால் கதவுகளைத் திறந்து, அநேகருடைய தேவைகளைச் சந்திக்க முடியும். அவருக்கு மறுமொழி கொடுக்கும் வகையில் அதைப் பயன்படுத்தினால், அது உங்களுக்கும், மற்றவர் களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க முடியும். அதைச் சேர்த்து வைத்துக்கொண்டால், அது இருளடைந்த இருதயத்திற்கு சீக்கிரம் ஒரு கூண்டாக மாறிவிடும்.

பணத்திற்கு இப்படிப்பட்ட நன்மையாக அல்லது தீமையாக மாறக்கூடிய திராணி இருப்பதால், நம் பணத்தை எப்படிக் கையாள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்?

### பண்டகசாலை தகமபாகம்

தசமபாகம் கொடுப்பது உண்மையாகவே எனக்கு எளிமையான காரியமாக இருந்தது. நான் பெற்றுக் கொண்ட எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பாகம் தேவனுக்குச் சொந்தம் என்று நான் வளர்ந்துகொண் டிருக்கையில் போதிக்கப்பட்டேன். பத்து சதவிகிதம்தான் அவருக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இது தசமபாகம்.

நான் எந்தச் சபைக்குப் போனேனோ, அந்தச் சபைக்குத் தசமபாகம் கொடுத்தேன். அங்கு பொறுப் பில் இருந்தவர்கள் சபையின் தேவைகளுக்காக—ஓர் இடம் வாங்க, சம்பளம் கொடுக்க, அதின் செயல் திட் டங்களை நிறைவேற்ற நிதியுதவிசெய்ய, குறைச்சலில் இருக்கும் மக்களுக்கு உதவ-தங்கள் விரும் பம்போல் அதைப் பயன்படுத்தினார்கள். தேவன் நடத்தியபடி கொடுக்க எனக்குச் சுதந்தரம் இருக்க வில்லை. நான் வேறு எங்காவது கொடுக்க விரும்பினால், அது தசமபாகமாக இருக்கக் கூடாது; அது அதற்குமேற்பட்ட காணிக்கையாக இருக்க வேண்டும். அதுதான் பண்டகசாலை தசமபாகம்.

நேர்மையாகச் சொல்வதானால், வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளைக்கொம் டு அம்படிம்பட்ட ஒரு முடிவுக்குக் வருவதில் நான் ஒருபோதும் முற்றிலும் சௌகரியமாக இருந்ததில்லை. நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்குமுன்பே ஆபிரகாம், நிச்சயமாக, தேவனுக்குத் தன் நன்றியைத் தெரி விக்கும் செயலாகத் தசமபாகம் கொடுத்தான். தசமபாகம் தேவனுடைய ஆலயத்தைப் பராமரிக்கவும், அங்கு சேவித்த லேவியர்களுக்குக் கொடுக்கவும் உதவியது. குறைச்சலில் இருந்தவர்களுடன் அது பகிர்ந்துகொள்ளப்பட்டது. அவர்களிடையே தேவனுடைய ஜீவனைக் கொண்டாடுவதற்கான பண்டிகை களுக்காகவும் அது பயன்படுத்தப்பட்டது.

ஆயினும், தசமபாகம் கொடுப்பது ஆதிச் சபையில் ஒரு பழக்கமாக இருந்ததா என்பதைப்பற்றி புதிய ஏற்பாடு மிக அமைதியாக இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். தசமபாகம் கொடுப்பது புதிய ஏற்பாட்டில் எங்கும் உற்சாகப்படுத்தப்படவில்லை. இருந்தபோதும், ஒருவருக்கொருவர் கொடுப்பதில் அவர்களுக்கிருந்த தாராளகுணத்தை இதுவரை எவரும் மிஞ்சினதில்லை.

ஆயினும், நான் இருந்த நிறுவனங்களுக்குப் பொருட்வசதிகள் வாங்கவும், அங்கிருந்தவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும், அவைகளின் செயல்திட்டங்களுக்கு நிதியுதவி செய்யவும் வேண்டும் என்ற நடைமுறைத் தேவையினால் குருடாக்கப்பட்டதால், இந்தக் காரியத்தை நான் பல ஆண்டுகளாகத் தவற விட்டுவிட்டேன். தவறாமல் தசமபாகம் செலுத்துபவர்கள் இல்லையென்றால், எங்களுக்கு மிக முக்கியமான காரியங்கள் என்று நாங்கள் நினைத்தவைகளுக்கு நிதியுதவி செய்திருக்க முடியாது. பழைய ஏற்பாட்டுத் தசமபாகத்தை நம் தேவைகளுக்கான நிரூபண-வசனமாக வளைப்பது எளிதாக இருந்தது.

**வேறு வகையாகக் கொடுத்தல்**

இப்போது நான் வேறுபட்ட ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். தசமபாகம் கொடுப்பது தவறு என்று நான் நினைக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் இருந்த மற்ற எல்லாவற்றையும்போல் அதையும் இப்போது சாதாரணமாகப் பார்க்கிறேன். ஆனால், தேவன் இயேசுவில் நமக்குக் காண்பிக்க விரும்பின அதைவிட நிஜமான ஒன்றின் வெறும் நிழலே இது. பழைய உடன்படிக்கையின் மற்ற நிழல்களைப்போல், கொடுப்பதின் நிஜமான பொருளை நீங்கள் கண்டுபிடிக்கும்போது, ஒப்பிட்டும்பார்த்தால், தசமபாகம் கொடுப்பது ஒரு மலிவான பதிலீடு என்பதை நீங்கள் காண்பீர்கள்.

"அப்படியானால், தசமபாகம் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்று நீங்கள் கூறுகிறீர்களா?" என்று கேட்கக்கூடும் இந்தக் கேள்வியை நான் நேசிக்கிறேன். இது தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று கூறுவதற்கான உள்நோக்கங்களைப் பொய்யாக்கிவிடுகிறது. இது நாம் தேவனுக்குக் கட்டவேண்டிய ஒரு தொகை, ஒரு கட்டாயம். அதைச் செலுத்திவிட்டால் போதும், மீதி 90 சதவிகிதத்தை வைத்துக் கொண்டு நம் விருப்பம்போல் செலவழிக்கலாம். அதைக் கொடுக்காவிட்டால், மல்கியாவில் சொல்லப்பட்டுள்ளதுபோல், நாம் தேவனுக்குச் செலுத்த வேண்டியதைத் திருடுகிறோம்.

புதிய ஏற்பாடு மிக வித்தியாசமான ஒரு சித்திரத்தை வழங்குகிறது. தசமபாகம் கொடுப்பது தம் சீடர்கள் பின்பற்ற வேம் டிய ஒரு பயிற்சி என்று இயேசு ஒருபோதும் சொல்லவில்லை. கொடுப்பதைப்பற்றி அப்போஸ்தலர் நடபடிகளும், நிருபங்களும் தொடர்ந்து பேசினாலுங்கூட, தசமபாகம் கொடுப்பதைப் பற்றி அங்கு மீண்டும் எதுவும் கூறப்படவில்லை. அதற்குப்பதிலாக, நாம் வேறொரு காரியத்தைப் பார்க்கிறோம். விசுவாசிகள் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தினால் கொடுக்கவில்லை; மாறாக, கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்து மனமுவந்து அவர்கள் கொடுத்தார்கள். ஜீவிக்கும் தேவனுடனான உறவில் வாழ அழைக்கப்பட்டவர்கள், அவருடைய தாராளகுணத்தினால் வனையப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டதால், தங்களைச் சுற்றியிருந்தவர்களிடமும் அவர்கள் அதே தாராளகுணத்தோடு நடந்து கொண்டார்கள். இதன் விளைவாக அவர்கள் கொடுத்ததால், தசமபாகம் கொடுப்பது சாதிக்கும் எதையும் விட அதிகமாக சாதிக்க முடிந்தது.

அனனியா சொத்தை விற்று, ஒரு பங்கை மறைத்து வைத்து, பேதுருவிடம் பொய் சொன்னபோதுகூட, அந்தப் பணத்தின்மேல் சபைக்கு எந்த உரிமையும் இல்லை என்றுதான் பேதுரு கூறினார். "அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையா? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையா?" (அப். 5:5).

எருசலேமில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட விசுவாசிகளுக்காக பவுல் பணம் சேர்த்தபோது, அது தன் கட்டளை என்று சொல்லாமல், அவர்களுக்கு அது ஒரு வாய்ப்பு என்று அவர் தெளிவாகக் கூறினார். "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி. 9:7).

முடிவாகச் சொல்வதானால், கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தினால் கொடுத்தால் உண்மையில் அது கொடுத்தலே அல்ல. அது நாம் செய்ய வேண்டிய இன்னொரு கடமையாகிவிடுகிறது. ஆரம்பத்திலிருந்து தேவனுடைய மனதில் இருந்ததைவிட இது மிகமிகக் குறைவானது. .

## தாராளமாய்க் கொடுத்தல்

மக்கதோனியர்கள் கொடிய தரித்திரத்தில் இருந்தபோதும், மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்ததைக் கண்டு பவுல் ஆச்சரியப்பட்டார். "அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவ மாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ் சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்" (2 கொரி. 8:2-4).

இது தசமபாகம் கொடுப்பதுபோல் தோன்றுகிறதா? தசமபாகம் கொடுத்திருந்தால் நம்மைத் திக்குமுக் காடச்செய்யும் இப்படிப்பட்ட விளைவு ஏற்பட்டிருக்குமா? நான் அப்படி நினைக்கவில்லை! மக்க தோனியா நாட்டு விசுவாசிகள் தேவனுடைய தாரளகுணத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட விசுவாசிகள். எனவே, தங்களுடைய சொந்தத் தேவைகளையும் பாராமல், அவர்கள் மற்றவர்களுக்குத் தாராளமாய்க் கொடுத்தார்கள்.

எதற்குக் கவனம் செலுத்த வேண்டுமோ அதைப் புதிய ஏற்பாடு சொல்லுகிற விதத்தை நான் நேசிக் கிறேன். தேவன் நமக்கு தாராளமாய்க் கொடுக்க வேண்டும் என்பதற்காக நாம் தேவனுக்குப் பணம் கொடுப்பதில்லை. மாறாக, அவர்தான் முதலாவது தாராளமாய்க் கொடுக்கிறார். தாராளமாய்க் கொடுத்து அவர் நம்மைத் திக்குமுக்காடச்செய்ததால், நாமும் அதே முறையில் மற்றவர்களுக்கு தாராளமாய்க் கொடுக்கிறோம்.

ஆனால், இங்கு ஒரு சிக்கல் இருக்கிறது. இல்லையா? தேவன் எனக்குத் தாராளமாய்க் கொடுத் திருப்பதுபோல் நான் உணராவிட்டாலும்கூட, நான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா? சரீரத்தில், கொடுப்பதும் வாங்குவதும் சுழற்சியாக நடைபெறுகின்றன என்று பவுல் கூறினார். இன்று யாரிடத் தில் அதிகமாக இருக்கிறதோ, நாளைக்கு அவர்கள் குறைச்சலோடு இருக்கக்கூடும். ஒருவனிடமும் அளவுக்கு அதிகமாகவும், அளவுக்குக் குறைவாகவும் இல்லாதபடிக்கு, இருப்பதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இலக்கு.

ஆனால், எது அளவுக்கு அதிகம், எது அளவுக்குக் குறைவு? ஏறக்குறைய முதல்—உலக நாடு களில் வாழ்கிற எல்லாரும், உலகத் தரத்தின்படி பொருளாதாரரீதியில் வியக்கத்தக்க அளவுக்குப் பணக் காரர்களாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இப்படியிருக்கையில், ஒரு சிலர் மட்டுமே தேவனுடைய தாராளகுணத்தை உண்மையாகவே அறிந்திருக்கிறார்கள் என்று நான் நினைக் கிறேன். ஏன்?

## தாராளகுணம்—தேவனுடைய பாணி

ஒரு சிலர் மட்டுமே உண்மையில் தேவனுடைய தாராளகுணத்தை அறிந்திருப்பதற்கு இரண்டு நிஜங்கள் காரணம். முதலாவது, அவர்கள் தங்கள் விருப்பங்கள், தங்கள் தேவைகள் என்னவென்று தாங்கள் கருதுவதின்படி, அதை அளக்கிறார்கள். நம்முடைய வீடுகளையும், கார்களையும், பொம்மை களையும் மற்றவர்களுடைய வீடுகளோடும், கார்களோடும், பொம்மைகளோடும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது பொறாமையும், பேராசையும் எழுகின்றன. நாம் அநேகக் கோரிக்கைகளை வைக்கும்போது, தேவன் தாராளகுணமுள்ளவர்போல் தோன்றமாட்டார்.

பொருளாதார சௌகரியத்தைவிட மிக ஆழமான மட்டத்தில் பவுல் தேவனுடைய தாராளகுணத்தைப் புரிந்துகொண்டார். பரிபூரணத்தை அனுபவித்தாலும் சரி அல்லது குறைச்சலில் கஷ்டப்பட்டாலும் சரி, மனரம்மியமாய் இருக்கும் இரகசியம் தனக்குத் தெரியும் என்று பவுல் கூறினார். ஏனென்றால், அவர் தன் சொந்தத் திட்டத்தில் அல்ல, மாறாகத் தன் வாழ்க்கைக்குத் தேவன் வைத்திருந்த திட்டத்திற்கே கவனம் செலுத்தினார். அவர் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுடைய தாராளமான கரத்தைப் பார்த்தார். அவர் அதை எப்படி விவரித்தார் என்று பாருங்கள்: "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப் பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்

படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" (2 கொரி. 9:8).

என் ஆவிக்குரிய வாழ்க்கையின் பெரும்பான்மையான பகுதியை நான் ஒரு கஞ்சத்தனமான தகப்பனின் குமாரனைப்போல்தான் வாழ்ந்திருக்கிறேன். ஒருபோதும் நான் விரும்பின எல்லாவற்றையும் பெறாத தாலும், என் மிக ஊக்கமான சில ஜெபங்களுக்கு அவர் பதில் தராததால் அடிக்கடி ஏமாற்றமடைந்த தாலும், தேவனிடத்தில் ஒரு குறுகுறும்பான ஏமாற்றத்தோடுதான் நான் வாழ்ந்தேன். ஆம், அடுத்த நபரைப்போல் அறிவுபூர்வமாக என்னால் நன்றியும், துதிகளும் ஏறெடுக்க முடிந்தது; ஆனால், அதின் கீழ், நான் அவரிடத்தில் எதிர்பார்த்த காரியங்களை அவர் செய்யாததால் நான் ஏமாற்றம்பட்டுவிட்டதாக உணர்ந்தேன், தொடர்ந்து ஏமாற்றத்தோடு வாழ்ந்தேன்.

என் வாழ்க்கைக்கு நான் வைத்திருந்த என் நிகழ்ச்சிநிரலை தேவன் அப்புறப்படுத்திவிட்டதால், கடந்த ஆறு ஆண்டுகளில்தான் பவுல் இங்கு பேசிக்கொண்டிருக்கும் காரியத்தை மங்கலாகவாவது என்னால் பார்க்க முடிந்திருக்கிறது. தேவனை என் பக்கத்தில் கொண்டுவர நான் மிகவும் பரபரப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்ததால், ஒவ்வொரு நாளும் அவர் என் வாழ்க்கையில் செய்துகொண்டிருந்த வியத்தகு காரியங்களை என்னால் பார்க்க முடியவில்லை. காரியங்கள் நான் விரும்புகிறபடி நடக்க வேண்டும் என்ற என் முன்னுரிமைகளை விட்டுவிட்டு, ஒவ்வொரு நாளையும் நான் ஆரம்பிக்கும்போது, தேவன் என் வாழ்க்கையில் செய்கிறதைப் பார்த்து நான் மலைத்துப்போகிறேன், உம் மையாக ஒவ் வொரு திருப்பத்திலும் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். அவர் எதையாவது எனக்குத் தராவிட்டால், உண்மையாக அது எனக்குத் தேவையில்லை என்பதே அதன் காரணம்.

இந்தக் காரணத்தினால்தான், பெரும்பாலும் நம் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமடைகின்றன. தேவனுக்கு நம்மைப்பற்றிய அக்கறை இல்லை என்பதல்ல காரணம்; மாறாக, சுயம் என்ற கொடுங்கோலனிடமிருந்து நம்மை விடுதலையாக்கியே தீர வேண்டும் என்பதில் அவர் குறியாக இருக்கிறார் என்பதே காரணம். அப்போது மட்டுமே, நாம் அவருடைய வளஆதாரங்களை அனுபவித்து மகிழ்ந்து, அவர் எவ்வளவு தாராளகுணமுள்ளவர் என்பதைக் காணமுடியும்.

**இது எப்படி வேலைசெய்கிறது?**

தேவனுடைய தாராளகுணத்தில் வாழ்வது நம் பணத்தையும், நேரத்தையும், ஆவிக்குரிய வாழ்க்கை யையும் தாராளமாகப் பகிர்ந்துகொள்ளும் வாழ்க்கை வாழ நம்மை நடத்துகிறது. வியத்தகு முறையில் தேவன் இப்படி நம்மேல் அக்கறை கொள்வதால், இனிமேல் நாம் நம்மை மையமாகக்கொம் டு வாழ வேம் டிய தேவையில்லை. அப்போது, நாம் மற்றவர்களுக்கு உதவ தேவன் விரும்புகிற வழிகளைப் பார்ப்பது எளிதாக இருக்கும்.

மக்கதோனியர்கள் தரித்திரத்தில் இருந்தபோதுங்கூட எப்படிக் கொடுத்தார்கள் என்பது உங்கள் நினை வில் இருக்கிறதா? தசமபாகம் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தினிமித்தம் அவர்கள் கொடுத்தார் களா? இல்லை. பவுல் எழுதியபடி, "மேலும், நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (2 கொரி. 8:5).

அவர்கள் தேவன் பேசியதைக் கேட்டு, அவர் சொன்னதைச் செய்தார்கள். அவ்வளவுதான். பவு லால் நினைத்துப்பார்க்க முடிந்ததைவிட அதிமாகக் கொடுத்தார்கள். தேவனுக்குக் கொடுப்பது என் றால், ஒரு கடமை என்ற முறையில் பத்து சதவிகிதம் கொடுப்பது என்று நினைப்பவர்கள் இதுபோன்ற கொடுத்தலை ஒருபோதும் புரிந்துகொள்ளமாட்டார்கள்.

துஷ்பிரயோக நிறுவனங்களிலிருந்து தேவன் வெளியே அழைத்துச் சென்றிருக்கும் மக்களிடமிருந்து, ஒவ்வொரு வருடமும் ஒரு சில தடவைகள், எனக்கு அழைப்புக்கள் வருகின்றன. "இப்போதிலிருந்து எங்கள் தசமபாகத்தை உங்கள் ஊழியத்துக்கு அனுப்புமாறு தேவன் எங்களை நடத்துகிறார்," என்று அவர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒரே விதமான பதிலையே எப்போதும் தருகிறேன். என்னை நினைத்துப்பார்த்ததற்காக அவர்களுக்கு நன்றிகூறியபின், மாதாமாதம் தவ றாமல் அனுப்ப வேண்டும் என்ற கட்டாயக் கடமையிலிருந்து அவர்களைத் திருப்பிவிடுகிறேன். "இந்த

மாதம் எங்களுக்கு எதையாவது அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தைத் தேவன் உங்கள் இருதயத்தில் வைத்தால், தயவுசெய்து அனுப்புங்கள். அடுத்த மாதமும் எங்களுக்கு எதையாவது அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தைத் தேவன் உங்கள் இருதயத்தில் வைத்தால், அப்படியே செய்யுங்கள். அதற்கடுத்த மாதங்களில், உங்கள் நன்கொடைகளை வேறு வகையில் பயன்படுத்துவதற்குத் தேவன் உங்களை நடத்தினால், தயவுசெய்து அப்படியே செய்யுங்கள்.” ஒன்றிரண்டு மாதங்களுக்கு மேல் அவர்களில் யாரும் எங்களுக்குத் தந்ததில்லை. கொடுப்பதற்குச் சிறந்த வழியை அவர்கள் கற்றுக்கொம் டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

**கொடுக்கும் வாழ்க்கை**

ஒவ்வொரு நாளும் நீங்கள் தேவனுடைய தாராளமான அன்பைச் சுவைக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதன்பின், உங்கள்மூலம் மற்றவர்களைத் தொட அவர் தம் தாராளகுணத்தைக் கொண்டு செல்ல விரும்புகிறார் என்று காண்பிப்பார். நான் பார்த்தவரை, வேதவாக்கியங்களின்படி, குறிப்பிட்ட எந்த இடத்திற்கும் அதைக் கொடுப்பதற்கு நீங்கள் கடமைப்பட்டவர்கள் அல்ல. நீங்கள் அவரால் நடத்தப்படும்போது, அதை எங்கு கொடுக்க வேண்டும் என்று அவர் உங்களுக்குக் காண்பிப்பார். எப்போதும் நெருக்கத்தில் இருப்பதாகக் கோருகிறவர்களுடைய வேண்டுகோள்களையும், கோரிக்கைகளையும் கேட்டுச் சாய்ந்துவிடாதீர்கள்.

உறவுமுறையிலான சூழலில் கூடிவருகிறவர்கள் பொருள்வசதிகளை வாங்குவதற்கும், சம்பளம் கொடுப்பதற்கும், செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் கணிசமாகப் பணம் செலவழிக்க வேண்டிய தேவை இல்லை; எனவே, தங்கள் தாராளகுணத்தைத் தேவன் பயன்படுத்துவதற்கான அற்புதமான வழிகளை அவர்கள் கண்டுபிடிக்கிறார்கள். குறைச்சலில் இருப்பவர்களுக்கும், உலகத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்தின் வெளிச்சத்தை விரிவாக்கவும், உதவுமாறு தேவன் நடத்துகிற ஊழியத்தின் செயல்முறைத் திட்டங்களை நிறைவேற்றவும், அவர்கள் கொடுக்கிறார்கள்.

இதை அவர்கள் சேர்ந்து அல்லது தனித்தனியாகச் செய்யலாம். ஆஸ்திரேலியாவில் எனக்கு ஒரு குழுவினரைத் தெரியும்; அவர்கள் தங்கள் குழுவின் சார்பாக விநியோகம் செய்ய ஒரு பொதுக் கணக்கை ஆரம்பித்து, காணிக்கை சேகரித்தார்கள். அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு எழுந்ததால், ஆறு வாரங்களுக்குப்பின், ஒவ்வொருவருக்கும் அவரவருடைய பங்கைக் கொடுத்து, தேவன் அவர்களை நடத்துவதுபோல் கொடுப்பதற்கு விட்டுவிட்டார்கள். ஒருவரோடொருவருடைய காணிக்கைகளைச் செலவுசெய்வதற்குப்பதிலாக, ஒருவரோடொருவருடைய விசுவாசத்தை உற்சாகப்படுத்தத் தங்கள் நேரத்தைச் செலவிடலாம் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

வேறு சிலரை எனக்குத் தெரியும்; அவர்கள் ஒவ்வொரு மாதமும் கொஞ்சப் பணத்தைச் சேர்த்துவைத்து, வாரம் முழுவதும் அதை எதிர்பாராத தருணங்களில் எங்கு கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று அவர்கள் பார்க்கிறார்கள்.

ம்ங்கள் தவறாமல் எந்தக் குழுவுடன் கூடிவருகிறீர்களோ, அங்குதான் நீங்கள் பத்து சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று தேவன் உங்களிடம் கூறினால், அப்படிக் கொடுப்பது பாவம் என்று நான் கூறவில்லை என்பதைக் கவனியுங்கள். உண்மையைச் சொல்வதானால், தேவன் ஆசீர்வதித்திருக்கும் மக்கள் எந்தக் குழுவிடமிருந்து பயன் பெறுகிறார்களோ, அதின் பொருளாதாரச் சுமையில் பங்குகொள்வதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லையென்றால், தேவன் தங்களை அங்குதான் இருக்க அழைத்திருக்கிறாரா இல்லையா என்பதைப் பரிசீலித்துப் பார்ப்பது நலமாக இருக்கும்.

ஒப்பிட்டுப் பார்த்தால், தேவனுக்கேற்றபடி கொடுக்கும்போது தசமபாகம் கொடுப்பது வெறுமனே ஒரு நிழல். தேவனை தாராளமான பிதாவாகக் காண்கிறவர்கள் அவர் தங்களிடம் கேட்பதின்படி செய்து, தசமபாகத்தைவிட அதிகமாகவே கொடுப்பார்கள். எது அதிகம்? இது அவர்கள் கட்டவேம் டிய ஒரு கட்டணம் அல்ல. மாறாக, அவருடைய தாராளகுணத்தின் விரிவாக்கம். அவர்கள் பேரன்போடு கொடுப்பார்கள். அது நிதிகளை மட்டும் கொடுக்காது; அது உறவுகளையும் கட்டுகிறது.

நிழலுக்குப்பின்னால் இருக்கும் நிஜத்தை நீங்கள் அனுபவிக்க முடியும் என்றால், ஏன் நிழலை அணைத்துக்கொள்ள வேண்டும்? இது இந்த இராஜ்ஜியத்தில் எவ்வளவு உண்மை? இல்லையா?